# நாம் ஒருமித்து எமது எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவோம்.



இங்கே நான் எனது எதிர்காலத்தை
தெரிவு செய்ய முடியும்.

இவ்விடம் எனது குடும்பத்திற்கு
நல்லது ஆனால





இங்கே எனது பிள்ளைகள்
ஆரோக்கியமாக வளர முடியும்.

## ஏன் வாக்களிக்க வேண்டும்?

வாக்களிப்பது, எங்களுடைய அடிப்படை உரிமை. நாம் ஒருமித்து வாழ்வதற்கு, நாம் இணங்கும் சட்டங்களை இயற்றும் பிரதிநிதிகளை தீர்மானிப்பதற்காக நாம் வாக்களிக்கிறோம்.

## தேர்தல்கள் எதைப் பற்றியது?

எமது தேர்தல் மாவட்டத்தில், எமது விருப்பு வேட்பாளருக்கு நாம் தேர்தலில் வாக்களிக்கிறோம். மிக அதிகமான வாக்குகள் பெற்ற வேட்பாளர் தேர்ந்தெடுக்கப் படுவார்

அவர் பாராளுமன்ற உறுப்பினர் ஆகுவார்.

மேலதிக தகவல்களுக்கு உமது உள்;ர் தேர்தல் திணைக்கள அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும். எமது இணையத்தளத்தில் அல்லது இலவச தொலைபேசி இலக்கத்தை அழைப்பதாலோ நீர் அந்த இலக்கத்தை அறியலாம்.

**www.elections.ca**

**1 800 463-6868** (இலவசம்)

செவிப்புலன் குறைந்தோருக்குரிய தொலைபேசி இலக்கம்
**1 800 361 8985**

Elections Canada

EC90229 (0404) / Tamil/Tamil

## நாம் அறிந்திருக்க வேண்டிய சொற்கள்

வாக்காளர் என்பவர் தேர்தல் தினத்தன்று ஆகக் குறைந்தது 18 வயது உடைய கனடிய பிரஜையாவார்.

வேட்பாளர்கள் என்பவர்கள் நாம் தெரிவு செய்ய விரும்பும் நபர்கள் ஆவர்.

வாக்காளர் பட்டியல் வாக்களிக்கப் பதிவு செய்யப்பட்ட மக்களின் பெயர்களைக் கொண்டுள்ளது.

நான் எனது வாக்காளர் தகவல் அட்டையைத் தபால் மூலம் பெறுவேன். அவ் அட்டை, எனது பெயர் வாக்காளர் பட்டியலில் உள்ளதை உறுதிப்படுத்துகிறது. அத்துடன் எப்போ, எங்கே வாக்களிக்க வேண்டும் என்பதை அவ்வட்டை எனக்கு அறியத்தருகிறது.

வாக்களிப்பு நிலையம் என்பது நான் வாக்களிக்க வேண்டிய இடமாகும்.

பிரதி தெரிவு அத்தாட்சி அலுவலகர் வாக்கு சீட்டை எனக்குத் தருவார். அவர் வாக்காளர்கள் தமது வாக்குச் சீட்டுகளில் குறியிடுவதற்கும் உதவி செய்ய முடியும்.

வாக்களிப்பு இலிகிதர் நான் வாக்களிக்கும் போது எனது பெயரை வாக்காளர் பட்டியலில் கோடு இடுவார்.

வாக்குச் சீட்டு என்பது எனது தேர்தல் மாவட்டத்தில் உள்ள வேட்பாளர்களின் பெயர்களை கொண்ட பத்திரம் ஆகும்.

இரகசிய வாக்குச் சீட்டு மூலம் கனடாவில் வாக்களிக்கப்படும்.

வாக்களிப்பு மறைவிடம் என்பது வாக்குச் சீட்டில் எனது தெரிவை குறியிடுவதற்காக நான் பின்புறமாகச் செல்லும் அந்தரங்க பகுதியாகும்.

நான் வாக்குச் சீட்டில் குறியிட்ட பின்பு, நான் வாக்குச் சீட்டை பிரதி தெரிவு அத்தாட்சி அலுவலகர் இடம் திருப்ப கொடுப்பேன். அவ் அலுவலகர் வாக்குச் சீட்டை திறக்காது சிறுவாரை கிழிப்பார். அதனால் எனது வாக்கு தொடர்ந்து இரகசியமாக இருக்கும். அதன் பின்பு நான் வாக்குச் சீட்டை வாக்களிப்பு பெட்டியில் இடுவேன்.

## தேர்தல்-நான் செய்யும் தெரிவு

தேர்தலின் போது, நான் வாக்காளர் தகவல் அட்டையை தபாலில் பெற வேண்டும். அவ் அட்டை எனது பெயர் வாக்காளர் பட்டியலில் உள்ளதை உறுதிப்படுத்துகிறது.

இந்த அட்டை முக்கியமானது.

இவ் அட்டை, எப்போ, எங்கே நான் வாக்களிக்க வேண்டும் என்பதை எனக்கு அறிவிக்கிறது.

நான் எனது அட்டையை பெறாவிடின், நான் வாக்களிப்பதற்காக, எவ்வாறு எனது பெயரை வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யலாம் என்பதை அறிவதற்கு நான் தேர்தல் திணைக்களத்துடன் தொடர்பு கொள்வேன்.

தேர்தல் காலத்தின் போது, தேர்தல் திணைக்கள இணையத்தளம் **www.elections.ca** யை பார்ப்பதன் மூலம், வேட்பாளர்களின் பெயர்களை, நான் அறிந்து கொள்ளலாம். வானொலி கேட்டல், தொலைக்காட்சி பார்த்தல், பத்திரிகை வாசித்தல். நண்பர் குடும்ப உறுப்பினர்களுடன் பேசுதல் மூலம் வேட்பாளர்களின் பெயர்களையும், அவர்களது கொள்கைகளையும் நான் அறிந்து கொள்ள முடியும். என்னை பிரதிநிதிப்படுத்த, நான் விரும்பும் வேட்பாளரை, நான் தெரிவு செய்வேன்.

## எவ்வாறு நான் வாக்களிப்பது?

நான் மூன்று வழிகளில் வாக்களிக்கலாம்.

நான் முன் கூட்டிய வாக்களிப்பில் வாக்களிக்க முடியும்.

முன்கூட்டிய வாக்களிப்பு, தேர்தல் தினத்தன்று வாக்களிக்க முடியாதவர்களுக்கும், வாக்களிக்க விரும்பாதவர்களுக்கும் ஆனது ஆகும்.

எல்லா வாக்காளரும் முன்கூட்டி வாக்களிக்க முடியும்.

முன்கூட்டி வாக்களிப்பதற்கான இடத்தையும், நேரத்தையும் எனது வாக்காளர் தகவல் அட்டையில் நான் அறிந்து கொள்ள முடியும் அல்லது அவ்வட்டையில் உள்ள தொலைபேசி இலக்கத்தில் கனடிய தேர்தல் திணைகளத்தை தொடர்பு கொள்வதன் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

விசேட வாக்கு சீட்டு மூலம் நான் வாக்களிக்க முடியும்.

விசேட வாக்கு சீட்டு வாக்களிப்பு, தபால் மூலம் அல்லது எனது தேர்தல் மாவட்டத்தில் உள்ள தெரிவு அத்தாட்சி அலுவலகரின் அலுவலகத்தில் நடை பெறலாம்.

மேலதிக தகவல்களுக்கு நான் தேர்தல் திணைக்களத்தை தொடர்பு கொள்ள முடியும்.

தேர்தல் தினத்தில் நான் நேரடியாக வாக்களிக்க முடியும்.

தேர்தல் தினத்தில், நான் வாக்களிப்பு நிலையத்திற்கு வாக்களிக்கச் செல்வேன்.

திகதிகள், நேரங்கள், வாக்களிப்பு நிலைய முகவரி என்பன வாக்காளர் தகவல்

அட்டையில் உள்ளது.

வாக்களிப்பு நிலையத்தில் எனது வாக்காளர் தகவல் அட்டையின் இலக்கம், ஓர் அட்டவனையில் உள்ள இலக்கத்துடன் சரியாக பொருந்துவதை நான் காண்பேன்.இரு தேர்தல் அலுவலகர்கள் மேசையில் இருப்பார்கள்: பிரதி தெரிவு அத்தாட்சி அலுவலகர், வாக்களிப்பு இலிகிதர்.

நான் எனது பெயரையும், முகவரியையும் பிரதி தெரிவு அத்தாட்சி அலுவலகரிடம் கொடுப்பேன். அதிகமான மக்கள் ஏற்கெனவே வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

நான் வாக்காளர் பட்டியலில் இல்லாவிடின் இன்னும் நான் தேர்தல் தினத்தில் பதிவு செய்து

கொள்ள வாய்ப்பு உண்டு. எனது வாக்களிப்பு நிலையத்தில், எனது அடையாளம், வதிவிடம் உள்ள நிரூபணத்தை பிரதி தெரிவு அத்தாட்சி அலுவலகரிடம் அளிப்பதன் மூலம் நான் பதிவு செய்து கொள்ள முடியும். எனது அடையாளம், வதிவிடம் பற்றி சத்தியப் பிரமாணம் செய்வதன் மூலமும், எனது அதே வாக்களிப்புப் பிரிவில் ஏற்கெனவே பதிவு செய்யப்பட்ட வேறோர் வாக்காளர் உடன் சென்று, அவரை எனக்காக உத்தரவாதமளிக்க வைப்பதன் மூலமும் நான் பதிவு செய்து கொள்ள முடியும்.

நான் வாக்களித்து விட்டேன் என்பதை காட்ட, வாக்களிப்பு இலிகிதர் வாக்காளர் பட்டியலில் எனது பெயரை கோடு இடுவார்.

பிரதி தெரிவு அத்தாட்சி அலுவலகர் மடித்த வாக்குசீட்டை என்னிடம் தருவார்.

நான் வாக்கு சீட்டில் குறியிடுவதற்குச் சிரமப்பட்டால் அந் நபர் எனக்கு உதவியும் செய்ய முடியும்.

நான் ஒரு நண்பரை அல்லது குடும்ப உறுப்பினரை எனக்கு உதவி செய்வதற்காக வாக்களிப்பு நிலையத்திற்கு கூட்டி வர முடியும்.

நான் பின்புறமாக வாக்களிப்பு மறைவிடம் செல்வேன். நான் யாருக்கு வாக்களிக்கிறேன் என்பதை ஒருவரும் பார்க்க முடியாது.

நான் தெரிவு செய்யும் வேட்பாளரின் பெயருக்கு பக்கத்தில் உள்ள வட்டத்தினுள் நான் ஓ யை குறியிடுவேன்.

எனது வாக்கு இரகசியமாக தொடர்ந்து இருப்பதற்காக நான் வாக்குச் சீட்டை மடிப்பேன்.

நான் எனது மடித்த வாக்குசீட்டை பிரதி தெரிவு அத்தாட்சி அலுலகரிடம் மீண்டும் எடுத்து செல்லுவேன். அவர் அதில் உள்ள சிறுவாரை கிழிப்பார்.

பிரதி தெரிவு அத்தாட்சி அலுவலகர் எனது வாக்கு சீட்டை திரும்ப எனக்கு தருவார்.

நான் எனது வாக்கு சீட்டை வாக்களிப்பு பெட்டியினுள் இடுவேன்.

எனது எதிர்காலம், எனது வாக்கு.

